புதிய கல்வியாண்டு - 2022

LEARN EASY
KNOWLEDGE IS POWER

zoom
வகுப்புக்கள்

Grade 2 - O/L

Medium

TAMIL / ENGLISH

- ICT
- Tamil
- Maths
- History
- English
- Science
- Commerce
- Sinhala

Learn Easy வெளியீடு
புலமைவளரி
இலக்கை நோக்கி

Call: 76667 4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை
வகுப்புக்கள் தரம் 2 தொடக்கம் தரம் 5 வரை
நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

LEARN EASY
KNOWLEDGE IS POWER

வலயக்கல்வி அலுவலகம் - திருகோணமலை

நான்கு வருட நடுத்தரக்கால அபிவிருத்தித்திட்டம்- தரம் 2345(4Y-MTDP-G2345)

இன் கீழ் முன்னொடுக்கப்படும்

கொவிட் - 19 கால மாற்று உபாயக்கல்விச் செயற்திட்டம் - 111 (COVID – PASEP-111)

மாதிரிப் பரீட்சை - 09 - 2021

வினாத்தாள் - 1

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்கும் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள்

நேரம் - 1 மணித்தியாலம்

சுட்டெண் : .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல் :

- உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிகோட்டின் மீது எழுதுக.
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன.
- ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடுக.

விடைத்தாள் பரீட்சகருக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளி
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
மதிப்பீடுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப்புள்ளி சரியாகும்.	

www.kedu.lk

- **மிகவும் நெருங்கிய தொடர்புடைய உருக் கூட்டத்தைத் தெரிக.**


1.



(1)



(2)



(3)

2.



(1)




(2)



(3)

- **இவ் உருக்கோலத்தில் அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிக.**

3.



(1) (2) (3)

4.



(1) (2) (3)

- **தரப்பட்ட வாக்கியத்தின் இடைவெளிகளில் வரவேண்டிய சொற்களைத் தெரிவு செய்க.**

5. ..... நாள் அவர் ..... பாடலின் முதல் மூன்று வரிகளையும் ..... ஏட்டில் எழுத முயன்றார்.

(1) ஓர், ஓர், ஒரு (2) ஒரு, ஒரு, ஓர் (3) ஒரு, ஓர், ஓர்

6. மாரிகால மழை நாளில் காலை நேரத்தில் விளையாடிக்கொண்டிருக்கும் போது வசி கிழக்குத் திசையில் தோன்றிய வானவில்லை நண்பர்களுக்குக் காட்டி மகிழ்ந்தான். இக் கூற்றுத் தவறானது. அதற்கான காரணமாக இருக்கக் கூடியது.

(1) வசிக்கு நண்பர்கள் என யாரும் கிடையாது.
(2) காலையில் வானவில் தோன்றுவதில்லை.
(3) காலையில் வானவில் மேற்குத் திசையில் தோன்றும்.

www.ikedu.lk

7. யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்கு உள்ள தூரம் 394km ஆகும். யாழ்தேவி யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி 35km வேகத்திலும் கடுகதி புகையிரதம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி 60km வேகத்திலும் காலை 6.00 மணிக்குப் புறப்பட்டன. எனின் மூன்று மணித்தியாலங்களில் இரு புகையிரதங்களும் நிற்கும் இடங்களுக்கு இடையிலான தூரம் எத்தனை கிலோமீற்றர் ஆகும்?

(1) 90 கிலோமீற்றர் (2) 114 கிலோமீற்றர் (3) 109 கிலோமீற்றர்

- **வெற்றிடத்தில் வரவேண்டிய விடையைத் தெரிக.**

8. 2 3 4 ; 4 6 8 ; 8 12 16 ……?……

(1) 12 24 30 ; (2) 16 24 32 ; (3) 16 32 64

9. A C E ; G I K ; M O Q ……?……

(1) S U Z ; (2) R S T ; (3) S U W


10. தரப்பட்ட கூற்றுக்களை வாசிக்குக.

- மழையைத் தர உதவுகின்றோம்.
- மண்சரிவைத் தடுக்க உதவுகின்றோம்.
- மண்வளத்தைக் காக்க உதவுகின்றோம்.
- எங்கள் சேவை இவ்வுலகத்திற்குத் தேவை.
- ஏன் இதனை புரிந்து கொள்ள மறுக்கின்றீர்கள்.

இவ் எண்ணம் தோன்றுவது.

(1) மனிதர்களிடத்தில் (2) விலங்குகளிடத்தில் (3)தாவரங்களிடத்தில்

11. தரப்பட்ட உருவை அவதானித்து விடையைத் தெரிக.



www.ikeduk


மேலே உள்ள உருவில் சிறுமி 95m தூரத்தில் நிற்கின்றாள். சிறுவன் 150m தூரத்தில் நிற்கின்றான். சிறுமி 5m ஓடும் நேரத்தில் சிறுவன் 10m தூரம் ஓடுவான். எனின் எத்தனையாவது மீற்றர் தூரத்தில் சிறுவனும் சிறுமியும் ஒருவரை ஒருவர் சந்திப்பர்?

(1) 50m (2) 25m (3) 40m

12. சமச்சீர் அச்சுக்களின் அடிப்படையில் குறைந்ததிலிருந்து கூடிச் செல்லும் ஒழுங்குமுறையில் அமைந்தது.


(1)  (2)  (3) 

13. செவ்வகமொன்றின் நீளம் 16m ஆகும். அகலம் 8m ஆகும். எனின் ஒரு மீற்றர் நீள அகலமுடைய துண்டுகள் எத்தனை வெட்டி எடுக்க முடியும்?






(1) 128 (2) 64 (3) 112


14. கீழ்வரும் விதத்தில் கடதாசித் துண்டொன்றை மடித்துக் காட்டியபடி நிழற்றிய பகுதி வெட்டி எடுக்கப்பட்டது.




கடதாசித் துண்டை விரித்துப் பார்க்கும் போது காணக்கூடிய உரு

(1)  (2)  (3) 

15. வினாக்குறி இடப்பட்ட இடத்தில் வரவேண்டிய உரு எது?





(1) (2) (3)

www.ikedu.lk

16. இம்ரான் தனது வீட்டிலிருந்து கிழக்கு நோக்கி 100m தூரம் சென்று பின் தெற்கு நோக்கி திரும்பி 50m தூரம் சென்றான். அங்கிருந்து வலதுபக்கம் திரும்பி 150m தூரம் சென்று பின் வலதுபக்கம் திரும்பி 100m தூரம் சென்று இறுதியாக வலதுபக்கம் திரும்பி 50m தூரம் சென்று நின்றான். எனின் அவன் இப்போது நிற்பது வீட்டிலிருந்து எத்திசையில் எவ்வளவு தூரத்தில் ஆகும்?

(1) வடக்குத் திசையில் 50m தூரத்தில்


(2) மேற்குத் திசையில் 50m தூரத்தில்

(3) வடக்குத் திசையில் 100m தூரத்தில்

17. பர்னாண்டோ மைதானத்தில் ஓடிக் கொண்டிருக்கும் போது நிழல் தன் பின்னே விழுவதை அவதானித்தான். எனின் ஓடிக் கொண்டிருக்கும் திசை மேற்குத் திசையாகும். இக் கூற்று

(1) சரியானது (2) கூறமுடியாது (3) பிழையானது

18. வெற்றுக் கூடுகளினுள் வரவேண்டிய கணிதச் செய்கைளைத் தெரிக.



(1) 


(2) 


(3) 


19. என்னிடம் ரூபா 1000.00 தாள்காசு ஒன்றும், ரூபா 100.00 தாள்காசு இரண்டும், ரூபா 50.00 தாள்காசு ஒன்றும் இருந்தது. நான் கடையில் சில பொருட்களை வாங்கிவிட்டு ரூபா 1000.00 தாள்காசைக் கொடுத்தேன். அப்போது கடைக்காரர் என்னிடம் உள்ள மீதித் தாள் காசுகளையும் வாங்கி விட்டு ரூபா 500.00ஐ தந்தார். எனின் நான் வாங்கிய பொருட்களின் விலை யாது?


(1) ரூபா 750.00 (2) ரூபா 500.00 (3) ரூபா 850.00

20. நீளமான கடதாசிக் கீலமொன்று மடிக்கப்பட்ட உரு முன்னே தரப்பட்டுள்ளது. அதனை மீண்டும் விரித்துப் பார்க்கும் போது மடிப்புக்கள் தோன்றும் விதம்



(1) 

(2) 

(3) 

21. தரப்பட்ட தரவைப் பயன்படுத்தி விடையைத் தெரிக.

- கண்ணனினதும் ராமுவினதும் நிறைகளின் கூட்டுத்தொகை 120kg ஆகும்.
- கண்ணனினதும் வசியினதும் நிறைகளின் கூட்டுத்தொகை 90kg ஆகும்.
- ராமுவினதும் வசியினதும் நிறைகளின் கூட்டுத்தொகை 110kg ஆகும்.

www.ikegu.lk

கண்ணனினதும் ராமுவினதும் நிறையான இருக்கக் கூடியது எது?

(1) கண்ணன் - 70kg
ராமு - 50kg

(2) கண்ணன் - 50kg
ராமு - 70kg

(3) கண்ணன் - 80kg
ராமு - 40kg


22. ஒரே அளவான நீளமுடைய 8 கம்பித்துண்டுகள் இருந்தன. அதனை ஒரே கம்பியாக ஒட்ட வேண்டும். இரு கம்பித்துண்டுகளை ஒட்டுவதற்கு ரூபாய் 70.00 கடைக்காரருக்குக் கொடுக்க வேண்டும். ஏனின் அவை முழுவதையும் ஒட்டினால் கொடுக்க வேண்டிய பணத்தொகை யாது?


(1) ரூபாய் 560.00 (2) ரூபாய் 490.00 (3) ரூபாய் 390.00


23. முதல் எழுத்து **சூட்டில்** உண்டு **ஏட்டில்** இல்லை. இரண்டாவது எழுத்து **பரியில்** உண்டு **பறியில்** இல்லை. மூன்றாவது எழுத்து **யன்னலில்** உண்டு **கண்ணில்** இல்லை. நான்காவது எழுத்து **சின்னத்தில்** உண்டு **சினத்தில்** இல்லை. எனின் அச்சொல் யாது?

(1) ஏதனம் (2) சூரியன் (3) சுத்தியல்

24. மூன்று சிறுவர்கள் சென்ற பாதையின் வரைபடங்கள் கீழே தரப்பட்டுள்ளது. அதில் நீண்ட தூரம் பயணஞ் செய்த பாதை எது?

(1) 

(2) 

(3) 

- பண்ணையொன்றில் நின்ற பிராணிகள் தொடர்பான விபரங்கள் தரப்பட்டுள்ளன. அதனை அவதானித்து **25 , 26 ஆகிய வினாக்களுக்குரிய விடையைத் தெரிக.**
  - **மாடுகளை விட கோழிகள் அதிகமாக உள்ளன.**
  - **வான்கோழியை விட ஆடுகள் கூடுதலாக உள்ளன.**
  - **மாடுகளை விட ஆடுகள் குறைவாக உள்ளன.**

25. பண்ணையில் அதிகமாகக் காணப்படும் பிராணி எது?

(1) வான்கோழி (2) கோழி (3) மாடு

26. குறைந்ததிலிருந்து கூடியது வரை ஒழுங்கு முறையில் அமைந்தது


(1) கோழி - மாடு - ஆடு - வான்கோழி

(2) வான்கோழி - ஆடு - கோழி - மாடு

(3) வான்கோழி - ஆடு - மாடு - கோழி

www.tkedu.lk

27. வினாக்குறி இடப்பட்ட இடத்தில் வரவேண்டிய எண் யாது?



(1) 6 (2) 8 (3) 9

28. ஆசிரியர் மாணவனிடம் ஓர் எண்ணை எழுதி அதிலிருந்து 70 ஐக் கூட்டும் படி கூறினார். ஆம்மாணவன் கூட்டுவதற்குப் பதிலாக கழித்து விட்டான். அப்போது பெறப்பட்ட விடை 980 ஆகும். எனின் அம்மாணவன் ஆசிரியர் கூறியபடி கூட்டியிருந்தால் பெறப்படும் எண் யாது?

(1) 1050 (2) 1120 (3) 1140


29. இரு எண்களின் கூட்டுத்தொகை 12 ஆகும். அவ்விரு எண்களினதும் பெருக்கல் தொகை 20 ஆகும். எனின் அவ்விரு எண்களுக்கும் இடையிலான வித்தியாசம் யாது?

(1) 7 (2) 6 (3) 8

30. ஒருவர் கோழிகள் மற்றும் பசுக்களை வளர்த்து வந்தார். அவற்றின் தலைகளின் மொத்த எண்ணிக்கை 33 ஆகும். கால்களின் மொத்த எண்ணிக்கை 92 ஆகும். அங்கு நின்ற கோழிகளினதும் பசுக்களினதும் எண்ணிக்கை யாது?

(1) கோழிகள் - 20 (2) கோழிகள் - 13 (3) கோழிகள் - 18
பசுக்கள் - 13 பசுக்கள் - 20 பசுக்கள் - 15

31.



பெரிய கனவுரு குற்றியில் 1cm நீள, அகல, உயரம் கொண்ட எத்தனை சிறிய சதுரமுகிக் குற்றிகள் வெட்டி எடுக்க முடியும்?

(1) 32 (2) 64 (3) 48

32. முதலில் தரப்பட்டுள்ள கூற்று தவறானது ஆகும். இக்கூற்று ஏன் தவறானது என்பதைக் குறிக்கும் விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

மேற்குத் திசையில் சூரியன் உதிக்கும் போது வானம் அழகுடன் பிரகாசிக்கும்.

(1) சூரியன் உதிக்கும் போது வானம் அழகுடன் பிரகாசிக்காது.

(2) ஆகாயம் ஒருபோதும் பிரகாசிக்கமாட்டாது.

(3) சூரியன் மேற்குத் திசையில் உதிக்கமாட்டாது.

www.ikeou.lk

33. சக்கரம் ஒன்று ஒரு நிமிடத்திற்கு 10 முறை சூழல்கின்றது. அது ஒருமுறை சுழலும் போது 20cm தூரத்தைக் கடக்கின்றது. ஏனின் அச் சக்கரம் ஒரு மணித்தியாலம் சுழலும் போது எவ்வளவு தூரத்தைக் கடக்கும்?


(1) 60m (2) 120m (3) 240m


34. தரப்பட்ட உருவில் முக்கால் பகுதியை விட அதிகமாக நிழற்றியிருக்க வேண்டும் எனின் ஆகக் குறைந்தது இன்னும் எத்தனை கட்டங்கள் நிழற்ற வேண்டும்?

(1) 4 கட்டங்கள்

(2) 5 கட்டங்கள்

(3) 3 கட்டங்கள்







35. இங்கு ஆங்கில எழுத்துக்கள் A , B , C , D , E ஆகியவற்றில் குறிப்பிடுபவற்றை எழுதுக.


(1) A – தாவரங்கள் B - மரங்கள் C- செடிகள் D - கொடிகள் E - பலா
(2) A – தாவரங்கள் B - கொடிகள் C- செடிகள் D - மரங்கள் E - பாகல்
(3) A – தாவரங்கள் B - செடிகள் C - கொடிகள் D - மரங்கள் E - வேம்பு


36. நாகமரம், மரஅணில், நீலோற்பலம், காட்டுக்கோழி, கரப்பந்தாட்டம் இவற்றின் மூலம் எம்மால் விளங்கிக் கொள்ளக் கூடியது யாது?

(1) இலங்கையில் மட்டும் காணப்படும் அம்சங்கள்.
(2) இலங்கையின் தேசியம் தொடர்பானவை.
(3) இலங்கையின் வரலாற்றுச் சிறப்பு மிக்கவை.

37.  இவ் வடிவத்தை மேலிருந்து பார்க்கும் போது தோன்றும் வடிவம் யாது?

(1) 

(2) 

(3) 

www.ikedu.lk

38. பணம் எடுக்கும் இயந்திரம் ஒன்றில் முதல் தடவை பணம் எடுக்கும் போது நாம் நினைத்த பணத்தின் இரண்டு மடங்கைத் தரும். இரண்டாம் தடவை எடுக்கும் போது முதல் தடவை எடுத்த பணத்தின் நான்கு மடங்கு கிடைக்கும். இரண்டாம் தடவை எடுத்த பணம் ரூபாய் 1200.00 எனின் முதலில் எடுக்க நினைத்த பணம் யாது?

(1) ரூபாய் 200.00 (2) ரூபாய் 150.00 (3) ரூபாய் 170.00

39. தரப்பட்டுள்ள நேரத்தை முகம் பார்க்கும் கண்ணாடியின் எதிரே பிடித்துப் பார்க்கும் போது தெரியும் நேரத்தை விட 35 நிமிடங்கள் முந்திய நேரம் யாது?



(1) நேரம் 8.35 (2) நேரம் 9.35 (3) நேரம் 8.25

40. சம்பவம் ஒன்று ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ளது. அதனை ஒழுங்குபடுத்தும் போது சரியாக அமையும் விடைத் தொகுதியைத் தெரிக.

A -ஈக்கள் உணவில் பறந்து வந்து அமர்கின்றன.

B - அசுத்தமான உணவை உண்பதனால் கிருமிகள் உடம்பில் சேருகின்றன.

C - குப்பை கூளங்களினால் ஈக்கள் பெருகுகின்றன.

D - சிலர் வீடுகளின் அருகில் குப்பை கூளங்களைக் குவித்து வைக்கின்றனர்.

E – உடலினுள் கிருமிகள் செல்வதால் வயிற்றுவலி ஏற்படுகின்றது.

F - ஈக்களின் காலில் இருக்கும் அசுத்தமான உணவில் சேருகின்றனர்.

(1) D , C , A , B , E , F (2) D , A , F , C , B , E (3) D , C , A , F , B , E





வலயக்கல்வி அலுவலகம் - திருகோணமலை

நான்கு வருட நடுத்தரக்கால் அபிவிருத்தித்திட்டம்- தரம் 2345(4Y-MTDP-G2345)

இன் கீழ் முன்னொடுக்கப்படும்

கொவிட் - 19 கால மாற்று உபாயக்கல்விச் செயற்திட்டம் - 111 (COVID – PASEP-111)

மாதிரிப் பரீட்சை - 09 - 2021

வினாத்தாள் - 11

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்கும் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள்

சுட்டெண் : .....

நேரம் - 1 மணித்தியாலம் 15 நிமிடம்

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல் :

- உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிகோட்டின் மீது எழுதுக.
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உபபகுதிகளும் உள்ளன.
- எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலே எழுதுக.
- விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடுக.
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகருக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளி
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
மதிப்பீடுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப்புள்ளி சரியாகும்.	

www.ikedu.lk

1. **தரப்பட்ட பந்தியை நன்றாக வாசிக்குக.**

தொலைவிலே நின்ற அந்த மாமரம் சலசலவென்று சிலிர்த்து ஆடிக்கொண்டிருந்தது. அதன் கிளைகளிலே தங்கநிற மாம்பழங்கள் அழகாகத் தொங்கிக் கொண்டிருந்தன. ஓர் அணிற்பிள்ளையும் ஒரு கிளிப்பிள்ளையும் அந்த மாமரத்தை நெருங்கின.

● **பந்தியை மாத்திரம் துணையாகக் கொண்டு விடையை எழுதுக.**

1) இங்கு கூறப்பட்டுள்ள இருபிராணிகளையும் எழுதுக.

.....

2) இரட்டைக்கிளவிச் சொல்லை எழுதுக.

.....

3) **'தூரத்திலே'** என்பதைக் குறிக்கும் சொல் எது?

.....

4) **'கிளையிலே'** என்பதன் பன்மை வடிவம் யாது?

.....

5) நிகழ்கால பன்மை வினைச்சொல்லை எழுதுக.

.....

6) அடைமொழிச் சொல் ஒன்று எழுதுக.

.....

2. **இடைவெளிக்குப் பொருத்தமான எழுத்தைத் தெரிந்து எழுதுக**.

1) உ.....க்கம் (ர , ற)

2) வா.....க்கை (ழ் , ள்)

3) இ.....னிசை (ண் , ன்)

4) பள்.....ம் (ள , ழ)

3. சரியான சொற்களை இட்டுப் பழமொழிகளைப் பூரணப்படுத்துக.

1) சிறு ..... பல்லுக்குத்த உதவும்.

2) சித்திரமும் கைப்பழக்கம் ..... நாப்பழக்கம்.

4. இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிந்து எழுதுக.

அவர்கள் அது
நீங்கள் அவை
நாங்கள்

I. ..... அலுவலகத்திற்குச் சென்றீர்களா?

II. ..... மைதானத்தில் விளையாடினோம்.

III. ..... வேகமாக நடந்து சென்றது.

www.lkedu.lk

5. பின்வரும் சொற்களைச் சேர்த்தெழுதுக.

1) ஓர் + ஊர் : .....

2) தெங்கு + காய் : .....

6. தரப்பட்ட ஐந்து சொற்களில் ஒன்று வேறுபட்டது. அச்சொல்லின் கீழ்க் கோடிடுக.

(1)ஆறு (2) குளம் (3) குட்டை (4) கேணி (5) வாவி

7. இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிந்து கோடிடுக.

I. பறவைகள் ..... (இரை , இறை) தேடி அங்குமிங்கும் அலைந்து திரிந்தன.

II. நீரை வீண் ..... (விரையம் , விரயம்) செய்ய வேண்டாம்.

III. ..... (கத்தரிக்கோலால், கத்திரிக்கோலால்) கடதாசியை இருபகுதிகளாக வெட்டுக.

8. பின்வரும் கூற்றுக்கள் அறிவித்தலா? அறிவுறுத்தலா? கட்டளையா? என எழுதுக.

I. மூன்று விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

.....

II. மாணவர் மன்றக் கூட்டம் அடுத்தமாதம் முதலாவது வெள்ளிக்கிழமை பி.ப 1.00 மணியளவில் பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

.....

III. மேல்தட்டிலுள்ள பெட்டியிலிருந்து மஞ்சள்நிற பலூன்களை எடுத்து வாருங்கள்.

.....

9. பின்வரும் வாக்கியத்திற்குப் பொருத்தமான நிறுத்தற் குறிகளை இடுக.

எந்த எண் எனக்கு ஒன்றும் புரியவில்லையே என்று சற்றுக் குழப்பத்துடன் கேட்டான்

10.(1) **தரப்பட்ட வாக்கியத்தில் உள்ள மரபுத் தொடருக்கான கருத்தினைத் தெரிந்து கோடிடுக.**

அவர் தான் செய்த குற்றத்தைப் பூசி மெழுகினார்.

(1) குற்றத்தை மறைத்தார் (2) குற்றத்தை வெளியே கூறினார்.

www.lkedu.lk

- **(2) வெற்றிடத்தில் வரவேண்டிய சொல்லைத் தெரிந்து கோடிடுக.**

எழுபத்தைந்தாவது ஆண்டின் நிறைவில் .....
கொண்டாடப்படுகின்றது. (வைரவிழா , பவளவிழா)

இலை , தழை கொண்டு வேயப்பட்ட சிறு குடிசை .....

(ஆச்சிரமம் , பன்னசாலை)

11. **இடைவெளியில் வரவேண்டிய எழுத்துக்களை இட்டு சொற்களைப் பூர்த்தி செய்க.**


I.Te ..... cher (a , e) ii. M.....ther (a , o)

12. **தமிழ்க் கருத்தை எழுதுக.**

I. May I come in? : .....

II. Clap your hands. : .....

13. **தரப்பட்ட உருக்களுக்கான சிங்களச் சொல்லைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**



.....



.....

14. **தமிழ்க் கருத்தை எழுதுக.**

I. நங்கி இன்னவா : .....

II. என்ன லமய் : .....


15. நாட்டில் உள்ள அனைத்து இனத்தவர்களும் தமது பண்டிகைகளைத் தவறாது கொண்டாடி மகிழ்வார். அத்தகைய **பண்டிகைகளைக் கொண்டாடுவதால் உண்டாகும் அனுகூலங்கள்** எனும் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும்.)

I. .....
.....

II. .....
.....

III. .....
.....

www.ikedu.lk

16. 

இவ் இலக்கங்களைப் பயன்படுத்தி ஆக்கக் கூடிய மிகச்சிறிய எண்ணை சொற்களில் எழுதுக.

.....

17. தரப்பட்டுள்ள எண்ணை விரித்தெழுதுக.

68040 = ... + ... + ...+ .....+ .....

18.

19	28	63
34	14	
	42	59


கூட்டில் உள்ள எண்களில் 7 ஆல் வகுபடக் கூடிய எண்ணை சிறிய எண்ணிலிருந்து பெரிய எண்வரை ஒழுங்குமுறையில் எழுதுக.


.....


19. எண்கோலம் ஒன்றை அமைப்பதற்கு வெற்றிடங்களில் வரவேண்டிய எண்களை எழுதுக.


2, 4, 8, ..., 22, 32, ...

20. அரைப் பகுதிக்கு நிழற்றப்பட்டுள்ள உருவின் கீழ்க் கோடிடுக.

1) 

2) 

3) 



21. இக் கடிகார முகம் காட்டும் நேரத்தை சொற்களில் இருவேறு முறைகளில் எழுதுக.

முறை 1 : .....

முறை 2 : .....

22. 646 பேனைகளை ஒரு பிள்ளைக்கு நான்கு பேனைகள் வீதம் ஆசிரியர் பகிர்ந்தளித்தார்.

I. பேனைகளைப் பெற்றுக் கொண்ட பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?

.....

II. மேலும் ஒரு பிள்ளைக்கு கொடுக்க வேண்டும். மீதியாக உள்ள பேனைகளுடன் இன்னும் எத்தனை பேனைகள் சேர்க்க வேண்டும்?

www.ikedu.lk

.....

23. பூசனிக்காய் ஒன்றின் நிறை 4kg 50g ஆகும். இன்னொரு பூசனிக்காயின் நிறை 2kg 75g ஆகும். இரு பூசனிக்காய்களினதும் மொத்த நிறை யாது?

.....


24. (1) எதிரெதிர்ப் பக்கங்கள் சமமாகவுள்ள திண்மவுரு எது?

.....

(2) நான்கு உச்சிகள் மட்டும் கொண்ட திண்மவுரு எது?

.....

25. தரப்பட்ட உருவைப் பயன்படுத்தி விடை எழுதுக.



(1) நிழற்றப்பட்ட பகுதியை முழு உருவின் பின்னமாக எழுதுக.

.....

(2) நிழற்றப்படாத பகுதியைத் தசம எண்ணாக எழுதுக.

.....

26. தரம் 05 வகுப்பில் 27 மாணவர்கள் உள்ளனர். ஒரு மாணவருக்கு 125ml குளிர்பானம் வழங்க வேண்டும். எனின் வகுப்பிலுள்ள அனைவருக்கும் வழங்குவதற்குத் தேவையான குளிர்பானத்தின் அளவை லீற்றர் , மில்லிலீற்றரில் எழுதுக

.....l .....ml

27. தரப்பட்ட விலைப்பட்டியலை அவதானித்து வெற்றிடங்களைப் பூர்த்தி செய்க.

பொருள்	விலை
பேனை - 1	ரூபாய் 18.00
கத்தரிக்கோல் -1	ரூபாய்125.00
அடிமட்டம் - 1	ரூபாய் 40.00


பொருள்	அளவு	விலை
பேனை	5	.....
அடிமட்டம்	3	.....

28. 2m நீளமான துணியானது கொடிகள் தைப்பதற்கு 8 சம துண்டுகளாக வெட்டப்பட்டது. எனின் ஒரு கொடியின் நீளம் யாது?

.....

www.ikedu.lk

29.



(1) சந்தை மண்டபத்திற்கு எத்திசையில் உள்ளது?

.....

(2) நூலகத்திற்கு தெற்கில் உள்ளது எது?

.....

30. 2kg 750g தேயிலை 250g நிறைகொண்ட சிறு பொதிகளாக்கப்பட்டன. எனின் எத்தனை பொதிகள் கட்டப்பட்டிருக்கும்

.....

● **31 தொடக்கம் 60 வரையான ஒவ்வொரு வினாவிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.**

31. எமது நாடான இலங்கை நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட சிறிய ..... ஆகும். இடைவெளியில் வரவேண்டிய சொல் எது?

(1) குடா (2) கண்டம் (3) தீவு



32. மிகப்பெரிய மாகாணத்தையும் மிகச்சிறிய மாகாணத்தையும் குறிக்கும் ஆங்கில எழுத்துக்கள் முறையே

(1) A , F (2) B , E (3) A , E

33. "F" எனும் எழுத்தினால் குறிக்கப்படும் மாகாணம் எது?

(1) சப்ரகமுவ மாகாணம் (2) ஊவா மாகாணம்

(3) மத்திய மாகாணம்

34. இலங்கை தொடர்பான கூற்றுக்களில் சரியானது.

(1) இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்துள்ள சிறிய தீவாகும்.

(2) இந்தியாவிற்கு வடக்கில் அமைந்துள்ள சிறிய நாடாகும்.

(3) இலங்கை ஆபிரிக்கக் கண்டத்தில் அமைந்துள்ள சிறிய தீவாகும்.

35. எமது நாட்டின் தேசிய விளையாட்டு எது?

(1) 

(2) 



www.ikedu.lk

36. ஆவணி மாதம் பூக்கள் பூக்கும் தாவரங்கள்

(1) இலுப்பை , கொன்றை (2) வாகை , விளா (3) பாலை , வீரை

37. ஒத்த வடிவமுடைய இலைகளைக் கொண்ட தாவரங்கள்.

(1) பலா , பாகல் (2) தென்னை , புளி (3) மூங்கில் , கரும்பு

38. பூக்களில் தேன்பருக வரும் பிராணி அல்லாதது.

(1) வண்ணத்துப்பூச்சி (2) தேன்சிட்டு (3) வெட்டுக்கிளி

39. வறள்நிலப் பிரதேசங்களில் வளரும் தாவரங்களைக் கொண்ட தொகுதி

(1) வாழை , கமுகு, கங்கூன்

(2) பிரண்டை, கள்ளி, கற்றாளை

(3) தென்னை, இலந்தை, கொகில

40. காற்றினால் பரவலடையும் வித்துக்களில் காணப்படும் இயல்புகளில் ஒன்று

(1) சுவையான சதைப்பகுதியைக் கொண்டிருக்கும்.

(2) பாரம் கூடியதாகக் காணப்படும்.

(3) சிறகு போன்ற அமைப்பைக் கொண்டிருக்கும்.

41. பின்வருவனவற்றுள் கொன்றை மலர் எது?

(1) 

(2) 

(3) 

42. வண்ணத்துப்பூச்சியின் வாழ்க்கை வட்டத்தின் ஒழுங்குமுறை

(1) குடம்பி - முட்டை - கூட்டுப்புழு - நிறையுடலி

(2) முட்டை - குடம்பி - கூட்டுப்புழு - நிறையுடலி

(3) குடம்பி - கூட்டுப்புழு - முட்டை - நிறையுடலி

43. பாதுகாப்பிற்காக தனது உடலின் நிறத்தை மாற்றிக் கொள்ளும் பிராணி எது?

(1) உடும்பு (2) ஓணான் (3) கபரகொய்யன்

www.ikedu.lk

44. எமது நாட்டிற்கே உரித்தான பறவை

(1) சபன்கோழி (2) புலத்ஹய்யா (3) கொம்புஓணான்

45. "**நொருங்கக் கூடியது**" என்பதைக் குறிப்பது.

(1)  (2)  (3) 

46. நாளென்றின் இருபத்து நான்கு மணிநேரமும் கடமை புரியும் நிறுவனம் எது?

(1) பாடசாலை (2) நீதிமன்றம் (3) வைத்தியசாலை




47.உருவில் காட்டப்பட்ட செயற்பாடு எப்பிராணியின் செயலை ஒத்துள்ளது?

(1) முயல் (2) குதிரை (3) றோபோ

48. எமது நாட்டின் தேசிய விளையாட்டில ஓரணியில் விளையாடும் வீரர்களின் எண்ணிக்கை யாது?

(1) 5 (2) 6 (3) 7

- தரம் 05 மாணவர்களால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடு ஒன்றினை உரு காட்டுகின்றது.

49. 

இச்செயற்பாட்டிற்கு மாணவர்கள் பயன்படுத்திய பொருட்கள் எவை?

1) மெழுகுவர்த்தி, உலோகக்கரண்டி, தண்ணீர்
(2) மெழுகுவர்த்தி, உலோகக்கரண்டி, மண்ணெண்ணெய்
(3) மெழுகுவர்த்தி, இறப்பர்கரண்டி, தேன்

50. இச்செயற்பாட்டின் போது மாணவர்கள் அறிந்து கொண்ட விடயம் யாது?

(1) வெப்பம் ஏற்றும் போது நீர் குளிர்ச்சியடையும்.
(2) வெப்பம் ஏற்றும் போது கிருமிகள் அழிவடையும்.
(3) வெப்பம் ஏற்றும் போது நீர் ஆவியாகும்.

51. சுவரின் நிலைக்குத்துத் தன்மையைப் பரிசோதிப்பதற்காக மேசன் பயன்படுத்தும் உபகரணம்

(1)  (2)  (3) 

www.lkedu.lk

52. போலியான, தரக்குறைவான பண்டங்கள், சேவைகள் விற்பனை செய்யப்படுகின்றதெனின் அவை தொடர்பாக எங்கு சென்று அறிவிக்க வேண்டும்?


(1) பிரதேச செயலாளர் அலுவலகம் (2) நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை


(3) கிராம அதிகாரி அலுவலகம்


53. எமது நாட்டு அரசினால் மக்களுக்கு வழங்கப்படும் இலவச சேவைகளில் ஒன்று

(1) போக்குவரத்து (2) மருந்துவம் (3) மின்சாரம்

54. பின்வருவனவற்றுள் கம்பளித் தையல் வகை எது?

(1) 

(2) 

(3) 

55. இங்கிலாந்தில் பிறந்து இலங்கையில் வாழ்ந்த விஞ்ஞானியும், எழுத்தாளருமாகத் திகழ்ந்தவர் யார்?


(1) ஆதர்.சி.கிளாக் (2) ஆனந்தகுமாரசுவாமி (3) ரீ.பி.ஜாயா

56. உடல் வளர்ச்சிக்கு உதவும் போசணைக் கூறு எது?

(1) கொழுப்பு (2) மாப்பொருள் (3) புரதம்

57. பருகுவதற்கு உகந்த ஆரோக்கியம் நிறைந்த பானம் எது?

(1) இளநீர் (2) சோடா (3) ஜஸ்கிறீம்

58. 

இவ் உபகரணம்

(1) காற்றுத் தட்டை (2) ஊசித்துளைக் கமரா

(3) காற்றுத் திசைகாட்டி

59. ஆரம்பகால தகவல் பரிமாற்ற முறைகளில் ஒன்று

(1) தீக்குவியல் மூட்டல் (2) தொலைபேசி (3) தொலைநகல்

60. திசைகாட்டியின் உள்ளே காணப்படும் காந்தம்

(1) சட்டக் காந்தம் (2) பரியிலாடக் காந்தம் (3) ஊசிக் காந்தம்

www.lkedu.lk